புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 இதழ்: 277 12-04-2026 ஞாயிறு பக்கம்- 4 விலை- ரூ.5 திருச்சி- புதுச்சேரி
Volum 01 Issue: 277 12-04-2026 Sunday Pages - 4 Price- Rs. 5 Trichy-Puducherry


## “திரிணமூல் அரசின் ஊழல்கள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடப்படும்” : பிரதமர் மோடி



பூர்ப பர்தமான்: ஏப்.12–

திரிணமூல் காங்கிரஸ் அரசின் ஊழல்கள் மீது நடவடிக்கை எடுப்பதை உறுதிசெய்ய, பாஜக ஒரு வெள்ளை அறிக்கையை கொண்டுவரும் என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார்.

மேற்கு வங்க மாநிலம் பூர்ப பர்தமானில் நடந்த பிரம்மாண்ட பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, “திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் சிண்டிகேட்கள் தொடர்புடைய ஊழல்கள் மீது நடவடிக்கை எடுப்பதை உறுதிசெய்ய, பாஜக ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிடும். இது திரிணமூல் அரசாங்கத்தின் 15 ஆண்டுகால முழு விவரத்தையும் முன்வைக்கும். இத்தகைய ஒவ்வொரு குற்றத்தையும் தடுக்க பாஜக ஆட்சியில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

எங்கெல்லாம் அதிக வாக்குப்பதிவும், பெண்களின் அதிகமான வாக்குகளும் பதிவாகிறதோ, அங்கெல்லாம் பாஜக தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மிகப்பெரிய மக்கள் ஆணை கிடைத்துள்ளது.

கேரளாவில், எல்டிஎஃப் மற்றும் யுடிஎஃப் ஆகிய இரு கூட்டணிகளும் தாங்கள் வெற்றி பெறுவோம் என்று கூட உரிமை கோராத ஒரு சூழல் நிலவுகிறது. மேற்கு வங்கத்திலும், பாஜக வெற்றியை நோக்கித் தொடர்ந்து முன்னேறி வருகிறது. உங்கள் உற்சாகமும், செயல்பாடுகளுமே அந்த வெற்றியை உறுதி செய்கின்றன

பாஜகவுக்கு மேற்கு வங்கத்தில் பெருகிவரும் ஆதரவைக் கண்டு, திரிணமூல் காங்கிரஸ் பீதியடைந்துள்ளது, இதனால் பொய்களைக் கூறி மக்களைத் திசை திருப்ப முயற்சிக்கிறது. திரிணமூல் காங்கிரஸின் ஊழல் கடையை பாஜக மூடிவிடும் என்பதில் நீங்கள் உறுதியாக இருக்கலாம். மேற்கு வங்கத்தின் அனைத்து சகோதரிகளுக்கும், மகள்களுக்கும் ஒரு உறுதிமொழியை அளிக்கவே நான் இங்கு வந்துள்ளேன். மேற்கு வங்கத்தில் உள்ள பெண்களுக்கு மாதம் ரூ.3,000 நிதியுதவி அளிக்கப்படும்.

பாஜக ஆட்சிக்கு வந்தால், தற்போதைய நலத்திட்டங்களை ரத்து செய்ய திட்டமிட்டுள்ளதாக திரிணமூல் காங்கிரஸ் தவறான தகவல்களைப் பரப்புகிறது. ஆனால் உண்மை என்னவென்றால், பாஜக எதையும் நிறுத்தாது. திரிணமூலின் ஊழல் எனும் கடையை மட்டுமே பாஜக மூடும், திரிணமூல் காங்கிரஸின் கொள்ளையை மட்டுமே பாஜக தடுத்து நிறுத்தும்” என்று அவர் கூறினார்.

மேற்கு வங்கத்தில் ஏப்ரல் 23 மற்றும் 29 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. மே 4ஆம் தேதி வாக்குகள் எண்ணப்படுகிறது.

## “அடுத்த 10 நாட்களுக்கு…” தவெகவினருக்கு விஜய் வைத்த கோரிக்கை



சென்னை: ஏப்.12–

“அடுத்த 10 நாட்களும் உங்களுக்கு உகந்த நேரத்தில் காலை, மாலை என இரு வேளையும் அவரவர் வசிக்கும் இடங்களில் தினமும் மக்களை வீட்டுக்கு வீடு தேடித் தேடி நேரில் சந்தித்து தவெக வேட்பாளர்களுக்கு விசில் சின்னத்தில் வாக்களிக்குமாறு வேண்டுகோள் வையுங்கள். இந்தக் களப் பணியில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்” என்று தவெக தலைவர் விஜய் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23ம் தேதி நடைபெறுகிறது. மே.4ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. இத்தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணி, விஜய்யின் தவெக, சீமானின் நாதக களமிறங்குகின்றன.

தேர்தலை ஒட்டி அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் பரபரப்பான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், தவெக தொண்டர்களுக்கு விஜய் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அடுத்த 10 நாட்களும் உங்களுக்கு உகந்த நேரத்தில் காலை, மாலை என இரு வேளையும் அவரவர் வசிக்கும் இடங்களில் தினமும் மக்களை வீட்டுக்கு வீடு தேடித் தேடி நேரில் சந்தித்து தவெக வேட்பாளர்களுக்கு விசில் சின்னத்தில் வாக்களிக்குமாறு வேண்டுகோள் வையுங்கள். இந்தக் களப் பணியில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்” என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக விஜய் எக்ஸ் தளத்தில் பகிர்ந்த பதிவில் கூறியிருப்பதாவது: என் நெஞ்சில் குடியிருக்கும் தோழர்கள் அனைவருக்கும் வணக்கம். ‘வாகை சூடும் வரலாறு திரும்பும்’ பயணத்தில் உங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் அளப்பரியது, இன்றியமையாதது.

மாற்றத்திற்கான முதன்மைச் சக்தியான நாம், நமது வெற்றிப் பாதையில் சரியாகப் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

தேர்தல் நாள் வேகமாக நெருங்கி வரும் இந்த வேளையில் ஒரு வேண்டுகோள். வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள், உறுப்பினர்களாக தங்களை தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக் கொண்டு நம்மோடு தோழர்களாகப் பயணிப்பவர்கள், கட்சியின் மீது பேரன்பு கொண்டுள்ள என்னுடைய நண்பா, நண்பிகள் அனைவரும் களத்தில் இறங்கிப் பணியாற்றுங்கள்.

அடுத்த 10 நாட்களும் உங்களுக்கு உகந்த நேரத்தில் காலை, மாலை என இரு வேளையும் அவரவர் வசிக்கும் இடங்களில் தினமும் நம் சொந்தங்களாகிய தமிழ்நாட்டு மக்களை வீட்டுக்கு வீடு தேடித் தேடி நேரில் சந்தியுங்கள். தவெக வேட்பாளர்களுக்கு விசில் சின்னத்தில் வாக்களிக்குமாறு வேண்டுகோள் வையுங்கள். இந்தக் களப்பணியில் தன்னார்வலர்களாக உங்களை இணைத்துக் கொள்ளுமாறு பேரன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாநில மற்றும் அனைத்து நிலை மாவட்டக் கழக நிர்வாகிகள், தவெக சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பைத் தாருங்கள். அனைவரையும் அரவணைத்துத் தேர்தல் பணியாற்றுங்கள். தன்முனைப்பற்ற தோழமை உணர்வோடு அனைவரும் வீட்டுக்கு வீடு சென்று மக்களைச் சந்தியுங்கள்.

இந்தத் தேர்தல் நமக்கானது மட்டுமல்ல, மாபெரும் மாற்றத்திற்கான, ஒரு தலைமுறைக்கான தேர்தல் என்பதை விளக்குங்கள். தன்னலமற்ற உழைப்பைச் செலுத்தி, நமது வெற்றிப் பயணத்திற்கு வலு சேருங்கள். ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான இந்தப் போரில் வெற்றிப் பேரணியாக ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் ஒன்று சேர்ந்து உண்மையான மக்களாட்சியை அமைப்போம்! வாகை சூடும் வரலாறு திரும்புகிறது! நல்லதே நடக்கும்! வெற்றி நிச்சயம்!

## மத்திய பார்வையாளர்களுடன் தலைமை தேர்தல் ஆணையர் ஆலோசனை: தேர்தலை சுதந்திரமாக நடத்த அறிவுறுத்தல்



சென்னை: ஏப்.12–

தமிழகத்தில் ஏப்.23ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் பொது பார்வையாளர்கள் 136 பேர், செலவின பார்வையாளர்கள் 150 பேர், காவல் பார்வையாளர்கள் 40 பேர் என 326 பார்வையாளர்கள் மற்றும் சிறப்பு செலவின பார்வையாளர் ஆகியோர் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகம் முழுவதும் பணியமர்த்தப்பட்டுள்ள மத்தியப் பார்வையாளர்களுக்கான (பொது, காவல் மற்றும் செலவினப் பார்வையாளர்கள்) ஆய்வுக் கூட்டம் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தலைமையில் டெல்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் தேர்தல் ஆணையர்கள் எஸ்.எஸ்.சாந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் பங்கேற்றனர். தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் மற்றும் மத்திய பார்வையாளர்கள் 327 பேர் காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் அறிவுறுத்தியதாவது: எவ்வித வன்முறையுமின்றி, திருவிழா மனநிலையோடு சுதந்திரமாகவும், நேர்மையாகவும் தேர்தல் நடத்தப்படுவதை மத்திய பார்வையாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.

தேர்தல் நடத்தை விதிகளை தீவிரமாக அமல்படுத்த வேண்டும். விதிமீறல்கள் குறித்த புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். பார்வையாளர்கள் தங்களது தொடர்பு எண்களையும், பொதுமக்கள், அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் அல்லது அவர்களது முகவர்களிடமிருந்து புகார்களை பெறுவதற்கான இடம் மற்றும் நேரத்தையும் நன்கு விளம்பரப்படுத்த வேண்டும். வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களுக்கான பயிற்சிகள் முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பதை மேற்பார்வையிட வேண்டும். வாக்குச் சாவடிகளில் கைபேசியை பாதுகாப்பாக வைக்கும் வசதி மற்றும் வரிசையில் காத்திருக்கும் வாக்காளர்கள் அமர்வதற்கான வசதி உள்ளிட்ட குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மாக, அனைத்து வாக்குச் சாவடிகளிலும் போதுமான குடிநீர் மற்றும் நிழல் வசதிகள் செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த வேண்டும்.

இணையவழி ஒளிபரப்பு (Webcasting) கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறை ஏற்பாடுகள் முறையாகச் சரிபார்க்கப்பட வேண்டும். இவ்வாறு அவர் அறிவுறுத்தினார்.

## 234 தொகுதிகளிலும் திமுக கூட்டணியே வெல்லும்: முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி



புதுக்கோட்டை: ஏப்.12–

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் மற்றும் அன்னவாசல் பகுதியில் நடைபயிற்சி மேற்கொண்ட திமுக தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், பொது மக்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். விராலிமலை தொகுதி திமுக வேட்பாளர் செல்லப்பாண்டியனை ஆதரித்து வாக்கு சேகரித்தார். மேலும், அங்கிருந்த பொதுமக்களுடன் கை குலுக்கி, கலந்துரையாடி ஆதரவு திரட்டினார். தொடர்ந்து பேருந்தில் ஏறி பயணிகளிடம் வாக்கு சேகரித்தார்.

மக்களின் எழுச்சியை பார்த்தால் 234 தொகுதிகளிலும் திமுக கூட்டணியே வெல்லும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி அளித்துள்ளார். திமுக கூட்டணி மகத்தான வெற்றி பெறும். அதிமுக அடிமையாகிவிட்டதால் டெல்லிதான் ஆதிக்கம் செலுத்துகிறது. என்ன செய்தாலும் திமுகவின் வெற்றியைத் தடுக்க முடியாது. தோல்வியின் உச்சத்துக்கு சென்றதால் விரக்தியில் எடப்பாடி பழனிசாமி பேசி வருகிறார். எடப்பாடி பழனிசாமி வைக்கும் விமர்சனங்கள் குறித்து நாங்கள் கவலைப்படவில்லை.

பேச்சுவார்த்தை தொடங்கும் முன்பே கடும் நிபந்தனைகளை விதித்த உயர்மட்ட குழு: ஹார்முஸ், ஹிஸ்புல்லா விவகாரத்தில் அமெரிக்கா ஈரான் பிடிவாதம்‘

என்ன செய்தாலும், பாஜக தலைவர்கள் எத்தனை பேர் படையெடுத்து வந்தாலும் திமுக வெற்றியைத் தடுக்க முடியாது. நடிகர் பின்னால் சென்று விபத்துகள் நேரிடுவதை நாட்டு மக்கள் பார்த்து கொண்டிருக்கின்றனர். எத்தனை அதிகாரிகளை மாற்றினாலும் திமுகவின் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது. அதிமுக என்ற திராவிடக் கட்சி டெல்லியிடம் அடகு வைக்கப்பட்டது வெட்கமாகவும், வேதனையாகவும் உள்ளது.

வேதனையை மட்டும் தரும் பா.ஜ.க; துரோகங்களை மட்டுமே செய்யும் அ.தி.மு.க. இவர்களை வீழ்த்தி, மண்ணையும் மக்களையும் மகிழ்ச்சியாக வைத்திருக்கும் திராவிட மாடல்; பத்தாண்டுகள் தி.மு.க. தொடர்ந்து ஆட்சி செய்தால் தமிழ்நாட்டின் வளர்ச்சி எப்படியிருக்கும் என்று 2031இல் காட்டுவோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் எகஸ்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு தேர்தல் பொது பார்வையாளர்கள், காவல் பார்வையாளர்கள், செலவின பார்வையாளர்கள் ஆகியோர் தலைமையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் செய்தியாளர்கள் சந்திப்பு



திருவள்ளூர் ஏப் 12 : –

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பல்நோக்கு கூட்டரங்கில் சட்டமன்ற பொது தேர்தல் 2026யை முன்னிட்டு தேர்தல் பொது பார்வையாளர்கள், காவல் பார்வையாளர்கள் மற்றும் செலவின பார்வையாளர்கள் ஆகியோர் தலைமையிலும் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு. பிரதாப் முன்னிலையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர் கூறியதாவது :

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 திருவள்ளூர் மாவட்டத்தை பொறுத்தவரை 10 சட்டமன்ற தொகுதிகளிலும் அந்தந்த தேர்தல் நடத்தும் அலுவலர்கள் அவர்கள் சார்ந்த பணிகளை மேற்கொண்டு வருகிறார். திருவள்ளூர் மாவட்டத்தை பொறுத்தவரை 10 சட்டமன்ற தொகுதிகளிலும் 1358 இடங்களில் 4016 வாக்கு சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், எஸ் ஐ. ஆர்க்கு பின் திருவள்ளூர் மாவட்டத்தில் 31,57,413 வாக்காளர்கள் இருந்தனர். எஸ்ஐஆருக்கு பின் திருவள்ளூர் மாவட்டத்தில் தற்போது (06.04.2026) 32,10,000 வாக்காளர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் இருக்கும் 10 சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ளார்கள்.இதில் 15,69,312 நபர்கள் ஆண்களும் 16,40,283 வாக்காளர்கள் பெண்களும், மூன்றாம் பாலினத்தவர்களாக 618 நபர்களும் வாக்காளர் பட்டியலில் உள்ளனர்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள 24 மணிநேரமும் கண்காணிக்கக்கூடிய கட்டுப்பாட்டு அறைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கட்டுப்பாட்டு அறைகளின் எண்கள் உங்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் எவர் வேண்டுமானும் எந்த விதமான புகார்களையும் உடனே தெரிவிக்கலாம். திருவள்ளூர் மாவட்டத்தை பொறுத்தவரை இதுவரை 248 புகார் மனுக்கள் கட்டுப்பாட்டு அறைக்கு வந்துள்ளது. அந்த 248 புகார் மனுக்களும் விசாரிக்கப்பட்டு அதற்கான தீர்வு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் தேர்தல் விதிமுறைகள் நடத்தை விதிகள் இருக்கும் நேரத்தில் அதை விதி மீறியதற்காக 28 எஃப்ஐஆர்கள் பல்வேறு கட்சி சார்ந்து நபர்கள் மீது பதியடைந்துள்ளது. மேலும் காவல்துறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஆவடி காவல் ஆணையர் அவர்கள் உள்ளிட்ட அனைவரும் இதற்கான பணிகளை அந்தந்த காவல்துறை அலுவலர்கள் மூலம் சிறப்பாக செய்துகொண்டு வருகிறார்கள். மேலும் தேர்தல் ஆணையத்தில் சிவிஜில் என்ற ஒரு செயலி உள்ளது. அந்த செயலியில் வாக்காளர்கள் இந்த தேர்தல் நடத்தை விதிமுறைகளில்

[தொடர்ச்சி 4ம்பக்கம்..]

## ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் முத்துசாமி தீவிர தேர்தல் பிரச்சாரம்.

### தொகுதி முழுவதும் தொண்டர்கள் புடை சூழ வாக்கு சேகரிப்பு.



ஈரோடு. ஏப்ரல். 12

ஈரோடு மேற்கு தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் அமைச்சர் முத்துசாமி தொகுதியில் தொண்டர்கள் புடை சூழ தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

தமிழகத்தில் வருகின்ற 23ஆம் தேதி சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளது. இதனைத் தொடர்ந்து அடுத்த மாதம் மே நான்காம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

இந்த நிலையில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் திமுக வேட்பாளராக ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் அமைச்சர் சு. முத்துசாமி தீவிர தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வருகிறார்.

இதனைத் தொடர்ந்து நேற்று தொகுதியில் உள்ள பல்வேறு இடங்களில் திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் புடை சூழ அவர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு சென்ற திமுக வேட்பாளர் அமைச்சர் முத்துசாமிக்கு தொகுதி மக்கள் ஆரத்தி எடுத்து தங்களின் ஆதரவை தெரிவித்தனர்.




தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2025 வருகின்ற 23.4.2026 அன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதையொட்டி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் தேர்தல் பொதுப்பார்வையாளர் மினிஸ்தி முன்னிலையில் 98 ஈரோடு (கிழக்கு) மற்றும் 106 கோபிசெட்டிப்பாளையம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளுக்கான கூடுதல் வாக்குப்பதிவு இயந்திரங்கள் துணை சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியின் போது அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சி பிரதிநிதிள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உடனிருந்தார்கள்.

# அறிவும் திறமையும் கொண்ட இளம் வேட்பாளர் கிருத்திகா..

### ஈரோடு செய்தியாளர்கள் சந்திப்பில் மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் பெருமிதம்..

ஈரோடு. ஏப்ரல். 12

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர் கிருத்திகா திறமைமிக்க இளம் பெண் வேட்பாளர் என, ஈரோட்டில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் பரிமளம் தெரிவித்தார் .

தமிழ்நாடு சட்டப்பேரவை பொது தேர்தல் இம்மாதம் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற இருக்கின்றது. அடுத்த மாதம் மே நான்காம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

நிலையில் தமிழ்நாட்டின் அதிமுக பாஜக தலைமையிலான தேசிய முற்போக்கு கூட்டணி கட்சியின் சார்பில் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு அவர்கள் தேர்தல் களத்தில் தீவிரமாக தேர்தல் பணியாற்றி வருகிறார்கள்.

கூட்டணியில் பாரதிய ஜனதா கட்சிக்கு 27 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியும் பாரதிய ஜனதா கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

நீண்ட இழுபறிக்கு பின் இந்த மொடக்குறிச்சி தொகுதியில் பாஜக வேட்பாளராக தற்போதைய எம்எல்ஏவாக இருந்து வரும் டாக்டர்சி.சரஸ்வதி அவர்களின் மருமகள் எஸ். கிருத்திகா சிவக்குமார் பாஜக தலைவிமையால் அறிவிக்கப்பட்டு உள்ளார். இதனை தனது மொடக்குறிச்சி வட்டாட்சியர்



அலுவலகத்தில் தனது வேட்பு மனைவி தாக்கல் செய்த பாஜக வேட்பாளர் எஸ். கிருத்திகா தொடர்ந்து தொகுதி முழுவதும் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இவருக்கு ஆதரவாக தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம் பெற்றுள்ள அதிமுக, பாமக உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் வேட்பாளர்கள் கிருத்திகா உடன் சென்று தாமரை சின்னத்தில் வாக்குகளை கேட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று பாஜக வேட்பாளர் எஸ். கிருத்திகாவுக்கு ஆதரவாக மத்திய தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் பியூஸ் கோயல் தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு வேட்பாளர் கிருத்திகாவுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்.

பின்னர் மாலை 4 மணி அளவில் ஈரோடு பச்சப்பாளி அருகே உள்ள தெற்கு மாவட்ட பாஜக கட்சி அலுவலகத்தில் அவர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது..

இந்தியாவில் பிரதமர் நரேந்திர மோடி ஜி தலைமையில் ஒரு சிறப்பான நல்லாட்சி நடைபெற்று வருகிறது.

அதேபோல் தமிழ்நாட்டிலும் குடும்ப ஆட்சி நடத்தி வரும் ஊழல் சக்தியாக விளங்கும் திமுகவை அப்புறப்படுத்திவிட்டு, தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி விரைவில் அமையும்.

அத்தகைய சூழல் வருவதற்கு சான்றாக மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி விளங்குகிறது. இங்கு போட்டியிடும் அறிவும், திறமையும் கொண்ட இளம் வேட்பாளராக எங்கள் சகோதரி கிருத்திகா போட்டிருக்கிறார்.

இவர்களின் குடும்பம் அரசியல் பாரம்பரியம் மிக்க குடும்பம் இவரது அத்தை டாக்டர் சரஸ்வதி அவர்கள் தற்போது இந்த மொடக்குறிச்சி தொகுதியின் எம்எல்ஏவாக இருந்து வருகிறார்.

சமுதாயத்தின் மீதும் சமூக நலன் காப்பதிலும் மிகுந்த அக்கறை கொண்ட இளம் வேட்பாளர் கிருத்திகா பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவது நிச்சயம்.

மேலும் தமிழகத்தில் கஞ்சா, அபின் மதுவகை உள்ளிட்ட போதை பொருட்கள் மிக அதிக அளவில் உள்ளது. இதனால் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது. மேலும் எல்லா வயதுடைய பெண்களுக்கும் பாதுகாப்பு இல்லாத ஒரு சூழல் நிலவுகிறது.

நடிகர் விஜய் ஒரு அரசியல் கட்சி ஆரம்பித்து கோமாளித்தனமான ஒரு அரசியலை செய்து வருகிறார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மறைந்த எம்ஜிஆர்க்கு பிறகு எந்த நடிகரும் அரசியலில் ஜொலிக்கவில்லை. நடிகர் திலகம் என்று பெயர் எடுத்த சிவாஜி, கேப்டன் விஜயகாந்த், உள்ளிட்ட பலரும் அரசியல் கட்சிகள் ஆரம்பித்து அவர்களால் அரசியலில் பெரிய அளவில் வர முடியவில்லை. இதை நடிகர் விஜய் அவர்கள் தெரிந்து கொண்டால் சரி.

இன்றைய சூழலில் அதிக இடங்களில் தேசிய ஜனநாயக கூட்டணி தமிழ்நாட்டில் வெற்றி பெறும்.

இவ்வாறு செய்தியாளர்கள் சந்திப்பில் மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் தெரிவித்தார்

## சேலத்தில் வாக்குச்சாவடிகளில் வெயிலின் தாக்கத்தை குறைக்க மாவட்ட ஆட்சியர் அ.அருண் தம்புராஜ் நடவடிக்கை

சேலம். ஏப்.12–

சேலம் மாவட்டத்தில் வாக்குப்பதிவு நாளில், வாக்குச்சாவடிகளில் வெப்ப அலைகளின் தாக்கத்தைக் குறைப்பதற்கான உறுதி செய்யப்பட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் மற்றும் வழிகாட்டுதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான அ.அருண் தம்புராஜ் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் ஆட்சியர் தெரிவித்ததாவது:

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஏப். 23ஆம் தேதி நடைபெறவுள்ளது. தற்போது கோடைகாலம் என்பதால் அதிகரித்து வரும் வெப்ப நிலையை கருத்தில்கொண்டு, வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடிகளில் வெப்ப அலைகளின் தாக்கத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.



அனைத்து வாக்கு மையங்களிலும் குடிநீர் வசதி, மின்விசிறி, கழிவறை வசதி ஆகிய அடிப்படை வசதிகள் இருப்பதை உறுதிசெய்து தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுகாதாரத் துறையின் சார்பில் போதுமான அளவு உப்பு, சர்க்கரை கலவை பாக்கெட் தயார்நிலையில் இருப்பதை உறுதிசெய்திடவும், கிராம சுகாதார செவிலியர் மற்றும் பெண் தன்னார்வலர்களை பற்றாளர்களாக கொண்டு வாக்குசாவடிகளில் ஓஆர்எஸ் வசதி ஏற்படுத்திடவும், 108 ஆம்புலன்ஸ் சேவை அவசரகால தேவைக்காக தயார்நிலையில் இருப்பதை உறுதிசெய்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ரா. ரவிக்குமார், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வாணி ஈஸ்வரி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அசோக்குமார், இணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.நந்தினி, மாவட்ட சுகாதார அலுவலர்கள் மரு.சௌண்டம்மாள், மரு.யோகானந்த், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் ராஜ்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஏபில் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளியில் 15வது ஆண்டு விழா




செஞ்சி ஏப் 12

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த வெள்ளை குளம் பகுதியில் இயங்கி வரும் ஏபில் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியில் 15 வது ஆண்டு விழா நடைபெற்றது

நிகழ்ச்சிக்கு பள்ளியின் தாளாளர் ஜான் வில்லியம்ஸ் தலைமை தாங்கினார்.

இதில் சிறப்பு விருந்தினராக ஜோசப் பீட்டர் பங்குத்தந்தை ரெக்ஸ் ஜான் போஸ்கோ முதுநிலை வருவாய் ஆய்வாளர் கண்ணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இதில் மாணவர்களின் நடனம் நாடகம் பேச்சுப்போட்டி மூலம் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். ஆசிரியர்களுக்கு மற்றும் மாணவர்களுக்கு கேடயம் சான்றிதழ் மெடல் மற்றும் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் விஜய் சேதுபதி ரசிகர் மன்ற நிர்வாகி வல்லரசு சரவணன், ஆசிரியர் வாசுகார்த்திகேயன் ,ரோமியோ டைலர் சதீஷ், ராகுல் ,கமலக்கண்ணன், வள்ளலார் மன்ற நிர்வாகி சர்தார் சிங், செஞ்சி அரிமா சங்க நிர்வாகிகள் புகழேந்தி, தேவேந்திரன் , வெற்றிச்செல்வி , மற்றும் ஆசிரியர்கள் வள்ளி ,சூர்யா, ப்ரீத்தா , வள்ளி, ஊழியர்கள் சத்யா, பாரதி மற்றும் மாணவர்கள் பெற்றோர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## சேலம் தெற்கு தொகுதியில் உரிய ஆவணங்களின்றி கொண்டுசென்ற ரூ.3.18 லட்சம் பறிமுதல்.

சேலம். ஏப். 12–

சேலம் தெற்கு தொகுதியில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.3.18 லட்சத்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு வரும் 23ஆம் தேதி நடைபெறுகிறது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதால் வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருள்கள் அளிப்பதை தடுக்க பறக்கும் படையினர், நிலை கண்காணிப்புக் குழுவினர் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சேலம் தெற்கு தொகுதிக்கு உள்பட்ட சீலநாயக்கன்பட்டி சோதனைச் சாவடி அருகே வெள்ளிக்கிழமை பறக்கும் படை அதிகாரிகள் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது, அவ்வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த நாழிக்கல்பட்டி பகுதியைச் சேர்ந்த சசிகுமாரை நிறுத்தி சோதனையிட்டனர்.

அதில், உரிய ஆவணங்களின்றி கொண்டுசென்ற ரூ. 2,18,320த்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்து, உதவி தேர்தல் நடத்தும் அலுவலரும், தனி வட்டாட்சியருமான என்.வள்ளமுனியப்பன் மாவட்ட கருவூலத்தில் ஒப்படைத்தார்.

இதேபோல, உடையாப்பட்டி சோதனைச் சாவடி அருகே நடைபெற்ற வாகனத் தணிக்கையில், தாதனூர் பகுதியைச் சேர்ந்த ஆனந்தகுமாரிடம் இருந்து உரிய ஆவணங்களின்றி கொண்டுசென்ற ரூ. ஒரு லட்சத்தை நிலை கண்காணிப்புக் குழுவினர் பறிமுதல் செய்தனர்.

## விழுப்புரம் இ எஸ் கல்வியல் கல்லூரியில் தமிழ் மன்ற விழா



விழுப்புரம் ஏப் 12

விழுப்புரம் இ எஸ் கல்வியல் கல்லூரியில் தமிழ் மன்ற விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு இ எஸ் கல்வி குழுமத்தின் தலைவர் செல்வமணி தலைமை தாங்கினார். இ எஸ் கல்வியல் கல்லூரி முதல்வர் முனைவர் செந்தில் முருகன் முன்னிலை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி தமிழ் துறை பேராசிரியர் தட்சிணாமூர்த்தி துணை பேராசிரியர் முனைவர் மணி கண்ணன் விழுப்புரம் எம் ஜி ஆர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ் துறை மதிப்புறு விரிவுரையாளர் இளவரசி கலந்து கொண்டு சங்க கால அறம் ,திருக்குறள் உணர்த்தும் வாழ்வியல் அறம், நவீன இலக்கியங்களில் வாழும் அறம், போன்ற தலைப்புகளில் சிறப்புரையாற்றினர். இதில் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் கவிதை தொகுப்பினை கல்லூரி முதல்வர் மற்றும் சிறப்பு விருந்தினர்களின் தலைமையில் வெளியிட்டனர் .மேலும் இக்கல்லூரி மாணவர்கள் திருக்குறள் ஒப்பித்தல் வில்லுப்பாட்டு மொழிப்போர் தியாகிகள் வரலாறு பாரதியார் பாட்டு மணல் ஓவியமீட்டுருவாக்கம் போன்ற நிகழ்வுகளில் பங்கேற்று தன் திறமைகளை வெளிப்படுத்தினர். இதன் வாயிலாக தமிழ் மொழியின் தொன்மை சிறப்பு வளமை முக்கியத்துவம் ஆகியவற்றை மாணவர்களுக்கு தெளிவாக புரியும் வண்ணம் எடுத்துரைத்து விளக்கினார்கள். இதில் இ எஸ் கல்வியியல் கல்லூரி துணை பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# மொடக்குறிச்சி தொகுதியில் வைகோ-துரை வைகோ தேர்தல் பிரச்சாரம்.. உற்சாகத்தில் தொண்டர்கள் - வெற்றிக் களிப்பில் வேட்பாளர் செந்தில்நாதன்..





ஈரோடு. ஏப்ரல். 12

மொடக்குறிச்சியில் நடைபெற்ற வைகோ மற்றும் துறை வைகோ தேர்தல் பிரச்சாரத்திற்கு பின்பு தொண்டர்கள் உற்சாகத்தில் உள்ளனர். வேட்பாளர் செந்தில்நாதன் வெற்றிக் களிப்பில் உள்ளார்.

தமிழக சட்டமன்ற பேரவை பொது தேர்தல் 2026, வருகின்ற ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற உள்ளது. இதனைத் தொடர்ந்து அடுத்த மாதம் மே நான்காம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

இந்த நிலையில் திமுக தலைமையிலா மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கட்சிகளின் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு அவர்கள் தங்களின் தொகுதிகளில் தீவிர தேர்தல் பிரச்சார பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் திமுக, காங்கிரஸ் விடுதலை சிறுத்தைகள், தேமுதிக, மதிமுக கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆகிய கூட்டணி கட்சிகளின் வேட்பாளராக மதிமுக வேட்பாளர் சா. செந்தில்நாதன் போட்டிருக்கிறார்.

இவர் மொடக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்த பிறகு திமுக காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் தொண்டர்களோடு சென்று தொகுதி முழுவதும் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

மதிமுக வேட்பாளர் செந்தில்நாதன் செல்லும் இடமெல்லாம் அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து தங்களின் ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ மற்றும் திருச்சி மதிமுக எம்பி, முதன்மைச் செயலாளர் துரை வைகோ ஆகியோ மொடக்குறிச்சி தொகுதிக்கு உட்பட்ட, கணபதிபாளையம் மற்றும் கருமாண்டம் பாளையம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மதிமுக வேட்பாளர் செந்தில் நாதனே ஆதரித்து உதய சூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தனர்.

தலைவர்களின் தேர்தல் பிரச்சாரத்தின் போது ஆயிரக் கணக்கான தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ. அக்கட்சியின் முதன்மைச் செயலாளரும் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் மாநாடு துறை வைகோ உள்ளிட்ட தலைவர்கள் தொகுதியில் மதிமுக வேட்பாளர் செந்தில்குமார் ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்து தேர்தல் பிரச்சாரம் செய்ததால், தொண்டர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். வேட்பாளர் செந்தில்குமார் வெற்றி மகிழ்ச்சியில் உள்ளார்.

# ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் தீவிர தேர்தல் பிரச்சாரம்.. நடந்து சென்று மக்களை சந்தித்து வாக்கு சேகரிப்பு..



ஈரோடு. ஏப்ரல்.12

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் தனது தொகுதியில் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

வருகின்ற 23ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. தொடர்ந்து மே மாதம்04 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

இந்த நிலையில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் தங்களின் வேட்பாளர்களை அறிவித்து தேர்தல் களத்தில் தீவிரமாக பணியாற்றி வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்டம், ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பி. கோபிநாத் பழனி அப்பன் அறிவிக்கப்பட்டு அவர் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்த பின் தொகுதி முழுவதும் தீவிரமாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார்.

இந்த நிலையில் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் திமுக, காங்கிரஸ், தேமுதிக, விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கூட்டணி கட்சி தொண்டர்கள் புனட சூழ அவர் தொகுதி முழுவதும் கை சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அவருக்கு தொகுதி மக்கள் ஆரத்தி எடுத்து தங்களின் ஆதரவை தெரிவித்தனர்.

# புதுச்சேரியில் வாக்கு எண்ணும் மையங்களில் மாவட்ட தேர்தல் அதிகாரி நேரில் ஆய்வு



புதுச்சேரி, ஏப். 12

புதுச்சேரியில் உள்ள 23 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு நேற்று வெற்றிகரமாக நடைபெற்றது. வாக்குப்பதிவு முடிந்ததைத் தொடர்ந்து, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களுக்குக் கொண்டு வரப்பட்டன.

பாதுகாப்புப் பணிகள் ஆய்வு

லாஸ்பேட்டையில் அமைந்துள்ள முக்கிய வாக்கு எண்ணும் மையங்களான:

தாகூர் கலைக் கல்லூரி

மோதிலால் நேரு பாலிடெக்னிக் கல்லூரி

மகளிர் பொறியியல் கல்லூரி

ஆகிய மூன்று மையங்களில் வாக்குப் பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப் பட்டு, அறைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகளை மாவட்ட தேர்தல் அதிகாரி குலோத்துங்கன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

ஆய்வின் போது, வாக்கு எண்ணும் மையங்களில் 24 மணி நேரமும் பாதுகாப்பைத் தீவிரப்படுத்தவும், எவ்வித சுணக்கமும் இன்றி கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது அவருடன்:

முதுநிலை காவல் கண்காணிப்பாளர் கலைவாணன்

கூடுதல் மாவட்ட ஆட்சியர் சுதாகர்

தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஏப். 15 முதல் மீன்பிடி தடைகாலம் அமல் விசைப்படகுகள் 14ம் தேதிக்குள் கரைக்கு திரும்ப வேண்டும்

மயிலாடுதுறை :

தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983ன் கீழ் தமிழகத்தின் கிழக்கு கடல் பகுதி முழுவதிலும் (திருவள்ளூர் மாவட்டம் முதல் கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி நகரம் வரை) மீன் இனப்பெருக்க காலத்தைக் கணக்கில் கொண்டும், மீன்வளத்தைப் பாதுகாத்திடும் பொருட்டும், ஆண்டுதோறும் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை (இரண்டு நாட்கள் உட்பட) 61 நாட்களுக்கு மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் இழுவலைப் படகுகள் மூலமாக கடலில் மீன்பிடிப்பதற்கு தடைவிதித்து அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையின்படி, கடலில் மீன்கள் இனவிருத்திக்கு ஏற்ற காலமான ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை உள்ள 61 நாட்கள் கடலில் மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பு செய்வதை நிறுத்தி வைப்பதன் மூலம் இடையூறு இல்லாத இனவிருத்தி மேம்பட்டு, மீன்வளம் பெருக வாய்ப்புள்ளதால் மீனவர்கள் நலன் கருதி 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை உள்ள 61 நாட்கள் மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் இழுவைப் படகுகள் மூலம் மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் எவரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்லக்கூடாது என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மீன்பிடித் தடைக்காலம் அமலுக்கு முன்னர் கடலுக்கு சென்ற மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள படகுகள் அனைத்தும் வரும் 14.4.2026 இரவு 12 மணிக்குள் கட்டாயம் கரைக்கு திரும்ப வேண்டும் என்றும், ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள படகுகளுக்கு மீன்பிடித் தடைக்காலம் குறித்த தகவலை VHF/Satellite Phone மறும் பிற தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் தெரிவித்து உடனடியாக கரைக்கு திரும்பிட முன்கூட்டியே அறிவுறுத்துமாறு அனைத்து மீன்பிடிப் படகு உரிமையாளர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட கலெக்டர் ஸ்ரீகாந்த் உத்தரவிட்டுள்ளார்.

# புதுச்சேரியில் மெஜாரிட்டி இல்லாத தொங்கு சட்டமன்றம்தான் அமையும்: ஆர்.எல்.வெங்கட்ராமன் பேட்டி




புதுச்சேரி:ஏப்.12–

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, ஆர்.எஸ்.வி. மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநிலத் தலைவர் ஆர்.எல். வெங்கட்ராமன், லாஸ்பேட்டை நாவலர் நெடுஞ் செழியன் பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை ஆற்றினார். வாக்களித்த பின் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

அரசியல் நிலவரம் குறித்த விமர்சனம்: பல ஆண்டுகளாக மக்களை ஏமாற்றி ஆட்சி செய்து வந்த காங்கிரஸ் மற்றும் பி.ஜே.பி கூட்டணி கட்சிகளையும், அரசியலை வியாபார மாக நடத்தும் போலி அரசியல் வாதிகளையும் மக்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

தேர்தல் ஆணையத்தின் கடுமையான கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், புதுச்சேரியில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் பணப்பட்டுவாடா மிகச் சாதாரணமாக நடந்துள்ளது வருத்தமளிக்கிறது.

பல வேட்பாளர்கள் தங்களது சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், அதிகாரத்தைப் பெறவும் கட்சித் தாவல்களில் ஈடுபட்டுள்ளனர்.

இத்தகைய தர்மத்தை மீறிய செயல்பாடுகள் எனது 49 கால அரசியல் வாழ்க்கையில் கண்டிராத ஒரு கேவலமான சூழல் என அவர் விமர்சித்தார்.

தேர்தல் எதிர்பார்ப்பு:

ஆர்.எஸ்.வி. மக்கள் முன்னேற்றக் கழகம் கட்சி ஆரம்பித்து நான்கு மாதங்களே ஆன நிலையில், பண பலமின்றி ஜனநாயக ரீதியாக இந்தத் தேர்தலைச் சந்தித்துள்ளோம். தேர்தல் முடிவு எப்படி வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

முக்கியக் கணிப்பு:

புதுவை மக்களின் விறுவிறுப்பான வாக்குப்பதிவு மற்றும் தற்போதைய அரசியல் சூழலைக் கவனிக்கும்போது, எந்தவொரு பெரிய கூட்டணிக் கட்சிகளுக்கும் பெரும்பான்மை கிடைக்காது. மாறாக, அதிகபட்சம் ஆறு இடங்கள் வரை சுயேச்சைகள் மற்றும் சிறிய கட்சிகள் வெற்றி பெற்று, புதுவையில் ஒரு 'தொங்கு சட்டமன்றம்' அமையவே வாய்ப்புள்ளது என ஆர்.எல். வெங்கட்ராமன் தெரிவித்தார்.

# புதுச்சேரி மீனாட்சிபேட் மலர் பள்ளியில் மழலையர் பட்டமளிப்பு விழா: மாணவர்கள் உற்சாகம்!



புதுச்சேரி:ஏப்.12–

புதுச்சேரி மீனாட்சி பேட்டில் உள்ள மலர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் (Malar English High School) மழலையர் பிரிவு மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா (Kinde rgarten Graduation Ceremony) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு, பள்ளியின் தாளாளர் ரி. குமரேசன் அவர்கள் தலைமை தாங்கினார். விழாவில் சிறப்பு விருந்தினராகப் புதுச்சேரி முப்படை வீரர்கள் மற்றும் வீர நாரிகள் நல சங்கத்தின் தலைவர் SGT. N. மோகன் (Veteran) கலந்துகொண்டு சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில் மழலையர் கல்வியை வெற்றிகரமாக முடித்த சிறுவர், சிறுமியர் களுக்குப் பட்டங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சிறப்பு விருந்தினர் தனது உரையில், குழந்தைகளின் ஆரம்பகாலக் கல்வியின் முக்கியத்துவம் குறித்தும், அவர்களைத் தேசபக்தி மிக்கவர்களாக வளர்ப்பதன் அவசியம் குறித்தும் பேசினார்.

இந்த விழாவில் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு குழந்தைகளை வாழ்த்தினர்.

விழாவிற்கான ஏற்பாடுகளைப் பள்ளி நிர்வாகத்தினர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

# புதுச்சேரியில் மிகவும் பிரசித்திபெற்ற தூய லூர்து அன்னை திருத்தலத்தின் 149ஆம் ஆண்டு பெருவிழா கொடியேற்ற நிகழ்வு




புதுச்சேரி, ஏப்.12–

புதுச்சேரியில் மிகவும் பிரசித்திபெற்ற தூய லூர்து அன்னை திருத்தலத்தின் 149ஆம் ஆண்டு பெருவிழா கொடியேற்ற நிகழ்வில், புதுச்சேரி மட்டுமின்றி பிரான்சு உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் ஏராளமான கிறிஸ்தவர்கள் பங்கேற்று மாதாவை வழிபட்டனர்.

புதுச்சேரி வில்லியனூரில் அமைந்துள்ள மிகவும் பிரசித்திபெற்ற தூய லூர்து அன்னை திருத்தலம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். பிரான்ஸ் நாட்டின் லூர்து நகருக்கு அடுத்து உலகிலேயே லூர்து மாதாவிற்கென கட்டப்பட்ட 2வது ஆலயம் வில்லியனூர் மாதா ஆலயமாகும். மேலும் தமிழர் பண்பாட்டின்படி, ஆலயத்துக்கு முன்குளம் அமைந்திருப்பது இதன் தனிச்சிறப்பாகும்.

இந்த ஆலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஈஸ்டர் பண்டிகை முடிவடைந்த வாரத்தில் சனிக்கிழமை அன்று ஆண்டு விழா கொடியேற்றத்துடன் தொடங்குவது வழக்கம். அதன்படி லூர்து அன்னை திருத்தலத்தின் 149 ஆம் பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதையொட்டி காலை 5.30 மணிக்கு ஆலயத்தில் நடைபெற்ற கூட்டு திருப்பலிக்கு பின்னர், மாதா உருவம் தாங்கிய திருக்கொடி பக்தர்கள் புடைசூழ மாதா திருக்குளத்தை சுற்றி பவனியாக கெண்டு செல்லப்பட்டது. அதன் பின்னர், திருத்தல முற்றத்தில் உள்ள கொடிமரத்தில் தஞ்சாவூர் மறைமாவட்ட ஆயர் ப. சகாயராஜ் திருக்கொடியேற்றி திருவிழாவை துவக்கி வைத்தார். இந்த விழாவில் புதுச்சேரி மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் பிரான்சு உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் ஏராளமான கிறிஸ்தவர்கள் பங்கேற்று மாதாவை வழிபட்டனர்.

இதனை தொடர்ந்து ஏப்ரல் 18ம் தேதி வரை திருவிழா நாட்களில் தினமும் காலை மற்றும் மாலையில் திருப்பலிகள், தேர்பவனி நடைபெறுகிறது.

ஏப்ரல் 19ம் தேதி திருத்தலத்தின் 149வது ஆண்டுப் பெருவிழாவை முன்னிட்டு திருப்பலி, அதனை தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு மாதாவுக்கு வைரகிரீடம் சூட்டப்பட்டு, பெருவிழா ஆடம்பர தேர்ப்பவனி நடைபெறவிருக்கிறது.



# திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து மேற்கொண்ட பிரச்சாரத்தில் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பேச்சு

திருவள்ளூர் ஏப் 12 : திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பத்து சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து திருவள்ளூரில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பிரச்சாரம் மேற்கொண்டார். அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களான கும்மிடிப்பூண்டி சுதாகர், பொன்னேரி சிறுனியம் பலராமன், திருத்தணி கோ. அரி, திருவள்ளூர் பி.வி.ரமணா, மாதவரம் வி. மூர்த்தி, மதுரவாயல் பா பெஞ்சமின், திருவெற்றியூர் கே குப்பன் ஆகியோருக்கு இரட்டை இலை சின்னத்திற்கும், ஆவடியில் பாஜக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ராஜசிம்ம மகேந்திரா என்கிற அஸ்வின் குமாருக்கு தாமரை சின்னத்திலும், அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் போட்டியிடும் பூந்தமல்லி வேட்பாளர் டி.ஏ.ஏழுமலைக்கு குக்கர் சின்னத்திலும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் அம்பத்தூரில் போட்டியிடும் வேட்பாளர் கே. என்.சேகருக்கு மாம்பழம் சின்னத்திலும் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.



தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. போதை பொருளான கஞ்சா தற்போது திரவ வடிவில், ஊசி வடிவில் என விதவிதமான வடிவங்களில் வந்து இளைஞர்களை சீரழிக்கும் இந்த ஆட்சி தேவையா? என்றும் பள்ளி, கல்லூரிகளுக்கு அருகே கஞ்சா விற்பனை செய்வதால் மாணவர்களின் வாழ்க்கை வீணாகி போகிறது. கஞ்சா போதை பழக்கத்தால் மட்டுமே பல்வேறு கொலை, கொள்ளை போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் குற்றம் சாட்டினார். திமுக ஆட்சியில் செய்த நன்மைகள் என்ன என கேள்வி எழுப்பினார்? திருவள்ளூரில் ரூ.400 கோடியில் மருத்துவ கல்லூரியும், தமிழக முழுவதும் இதே போல் 11 மருத்துவக் கல்லூரி அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்டதாக தெரிவித்தார்.தமிழகத்தில் பட்டப்படிப்பு பயில்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்தது என்றால் அதற்கு காரணம் அதிமுக தான். உங்களை ஆல் பாஸ் போட்டது நாங்கள். ஆனால் இப்போது புதிதாக கட்சி ஆரம்பித்ததற்கு உங்கள் ஓட்டா என்று கேள்வி எழுப்பினார்.

நீங்கள் அனைவரும் இந்த நாட்டை ஆளத் கூடியவர்கள். இளைஞர்களின் சிந்தனை நாட்டின் வளர்ச்சியை குறிப்பிட்டே இருக்க வேண்டும். ஒவ்வொரு இளைஞனும் சிந்தித்து வாக்களிக்க வேண்டிய காலம்இது. நான்போராட்டத்தில் கலந்து கொண்டு ஏழு முறை சிறைக்கு சென்றுள்ளேன். 10 தேர்தலை சந்தித்து எவ்வளவு பிரச்சனைகள் வந்தாலும் சமாளித்து மக்களுக்காக பாடுபட்டவன் நான். ஒரு சின்ன பிரச்சனைக்கு 22 நாள் வெளியே வராதவர் தான் விஜய். அதிமுக கூட்டணிக்கு வாக்களித்தால்தான் நாடு உருப்படும். புரட்சித்தலைவர் ஒரு தெய்வம். அவரையும் விஜய்யையும் ஒப்பிடாதீர்கள். என நான் ஒரு பேட்டியில் கூறியதாக நினைவு கூர்ந்தார்.

கொரோனா காலத்தில் பணியாற்றிய ஊழியர்களுக்கு ஒரு ரூபாய் சம்பளம் பிடிக்காமல் வழங்கிய அரசு அதிமுக அரசு. அதிமுக அரசால் தொடங்கப்பட்ட பணிகளை திமுக அரசு ரிப்பன் வெட்டி திறந்து இருப்பதாகவும் குற்றம் சாட்டினார். அதே திமுக கட்சி அல்ல கார்ப்பரேட் கம்பெனி பணம் வரக்கூடிய பைல்களில் மட்டுமே கையெழுத்து போடப்படுகிறது. விண்ணை முட்டும் அளவுக்கு விலைவாசி உயர்வு. அனைத்து வீட்டு உபயோக பொருட்களின் விலையும் உயர்ந்து விட்டது. கட்டுமான பொருட்களின் உயர்ந்துள்ளதாக குற்றம் சாட்டினார். மக்களுக்கு கஷ்டத்தை கொடுத்த திமுக ஆட்சி தேவையா? அண்ணா திமுக ஆட்சி அமைந்ததும் அம்மா உணவகம் திட்டம் தொடங்கப்படும்.முதலமைச்சர் நேரடி பார்வையில் இருக்கும். ஊழல் என்றால் திமுக.. திமுக என்றால் ஊழல்.. ஊழலையும் திமுகவையும் பிரிக்க முடியாது. எங்கள் கூட்டணியில் உள்ள தலைவர்கள் அனைவரும் முக்கியமானவர்கள். திருவாலங்காட்டில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை சிறப்பாக செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும். மகளிர் உதவித்தொகை 2000 ரூபாய் வழங்கப்படும். பிரிட்ஜ் வழங்கப்படும். 5 லட்சம் மகளிருக்கு இரு சக்கர வாகனம், மூன்று கேஸ் சிலிண்டர் இலவசம், தீபாவளிக்கு பட்டுப்புடவை, ஆண்களுக்கும் இலவச பேருந்து வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கு கூட்டுறவு சங்கங்களில் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்படும்.

ஏழை மக்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும். படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும் . இந்தியா முழுவதும் ஜாதி வாரியாக கணக்கெடுப்பு நடக்கப்படும். அதுவும் அதிமுக ஆட்சி அமைந்ததும் ஜாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்படும். அதிமுக ஆட்சியால் கொண்டுவரப்பட்டு திமுக ஆட்சியில் நிறுத்தப்பட்ட அனைத்து திட்டங்களும் மீண்டும் செயல்படுத்தப்படும் என்றும் கூறி பிரசாரம் மேற்கொண்டார்.



2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருச்சிராப்பள்ளி மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோ.அபிசேகபுரத்தில் உள்ள கலைக்காவிரியில் பயிலும் மாணவ, மாணவிகள் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி வாக்காளர் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகள் கையில் ஏந்தி விழிப்புணர்வு பேரணி உறுதிமொழி ஏற்றனர்.

### மணப்பாறை அருகே ம.ம.க. வேட்பாளர் பிரச்சாரம் செய்ய இளைஞர்கள் எதிர்ப்பு

# ஊர் மக்கள் வேட்பாளாரை தோளில் சுமந்து சென்று தேர்தல் பிரச்சாரம் செய்தனர்.









திருச்சி. ஏப்.12–

திருச்சி மாவட்டம். மணப்பாறை சட்டமன்ற தொகுதியில் தி.மு.க கூட்டணி கட்சி சார்பில் மனித நேய மக்கள் கட்சி வேட்பாளர் ப அப்துல் சமது மீண்டும் போட்டியிடுகிறார். கிராமங்கள் தோறும் பிரச்சாரம் செய்து வந்த அப்துல் சமது புத்தாநத்தம் அடுத்த வெள்ளைய கவுண்டம்பட்டிக்கு பிரச்சாரம் செய்ய இருந்த நிலையில் சில இளைஞர்கள், ஊருக்குள் செல்ல விட மாட்டோம் என்று கூறினர் பின்னர் இது பற்றி தகவல் அறிந்த ஊர் முக்கியஸ்தர்கள் உடனடியாக வெள்ளைய கவுண்டம்பட்டி ஊர் எல்லைக்கு வந்து இளைஞர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பின்னர் காரில் ஊருக்கு அழைத்துச் சென்றனர்.

காரில் வெள்ளைய கவுண்டம்பட்டிக்கு வாக்கு சேகரிக்க வந்த திமுக கூட்டணி கட்சி வேட்பாளர் அப்துல் சமதை கிராமத்தினர் காரில் இருந்து அவர்களது தோளில் சுமந்து பொதுமக்கள் மத்தியில் தூக்கிச் சென்றனர் இதை சற்றும் எதிர்பாராத வேட்பாளர் அப்துல் சமத் ஆனந்தக் கண்ணீரில் ஊர் மக்களுக்கு நன்றியை தெரிவித்தார்

பின்னர் வாக்காளர்கள் மத்தியில் கடந்தஐந்து ஆண்டுகளில் மணப்பாறை சட்டமன்ற தொகுதியில் தாம் செயல்படுத்திய மக்கள் நலத்திட்டங்கள் குறித்தும் வெள்ளைய கவுண்டம்பட்டி பகுதியில் செய்த பணிகள் குறித்து விளக்கி பேசினார்

மீண்டும் திராவிட மாடல்கள் ஆட்சி அமைய எனக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு தாரும்படியும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு வாக்காளர்கள் மத்தியில் வாக்கு சேகரித்தார்

# மணப்பாறை தொகுதி தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் ரா.கதிரவன் சுட்டெரிக்கும் வெயிலில் கிராமம் கிராமமாக விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்





திருச்சி ஏப்.12–

திருச்சி மாவட்டம் மணப்பாறை சட்டமன்ற தொகுதி தமிழக வெற்றி கழக வேட்பாளர் ரா. கதிரவன் வேட்பு மனுதாக்கல் செய்து மணப்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மருங்காபுரி, வையம்பட்டி, துவரங்குறிச்சி, மணப் பாறை, உள்ளிட்ட ஒன்றியங்களில் தொடர்ந்து தினந்தோறும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றார்

நேற்று மணப்பாறை ஒன்றியம் விடத்தலாம் பட்டி பகுதியில் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கிய வேட்பாளர் பா கதிரவன் ஒன்றியங்களில் உள்ள சுமார் 60க்கும் மேற்பட்ட கிராமங்களிலும் மணப் பாறை நகர பகுதியாண செவலூர், மஞ்சம்பட்டி , தீராம்பட்டி, உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று சுட்டரிக்கும் வெயிலில் தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற் கொண்டார்

தேர்தல் பிரச் சாரத்தில் ரா.கதிரவன் பேசியதாவது

மணப்பாறை சட்டமன்ற தொகுதியில் என்னை வேட்பாளராக தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் அவர்கள் என்னை நான் வேட் பாளராக அறிவிப்பதற்கு முன்பே கடந்த ஒரு ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு கிராமங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களின் அடிப்படை தேவைகள் என்ன என்பதை நன்கு அறிந்தவன் தேர்தலுக்காக வந்து செல்பவன் அல்ல எங்கள் தலைமை அப்படி எங்களுக்கு சொல்லிக் கொடுக்கவும் இல்லை மாற்றத்தை தேடி மக்களை நாடி என்ற ஒற்றைக் கருத்தோடு தொகுதி முழுவதும் வலம் வந்து கொண்டிருக்கின்றேன் தொகுதியில் பல்வேறு கிராமங்களில் சாலை வசதி இல்லாமலும் கழிவுநீர் கால்வாய் அங்கன்வாடிகள் நிழற்குடைகள் போதுமான கழிப்பிட வசதிகள் சுத்தமான குடிநீர் சிறுவர்கள் விளையாட்டு திடல் படித்த இளைஞர்களுக்கு வேலை இல்லை இது போன்ற எந்த ஒரு அடிப்படை வசதிகளையும் ஆண்ட அதிமுக கட்சியும் தற்போது ஆளுகின்ற திமுக கட்சியும் செய்து கொடுக்காமல் விட்டுவிட்டனர்.

அதன் காரணமாகவே மணப்பாறை தொகுதி முழுவதும் மிகப்பெரிய தாக்கத்தை இந்த தேர்தல் ஏற்படுத்தும்

நான் இந்த ஊரில் பிறந்து இதே ஊரில் வளர்ந்தவன் மக்களுக்கு என்ன தேவை என்னென்ன அடிப்படை வசதிகள் தேவை உள்ளது என்பதை நன்கு அறிந்தவன் புதியவன் ஒரு இளைஞனாக உங்கள் முன்பு களத்தில் நின்று உங்களிடம் வாக்குகள் கேட்கின்றேன் உங்களது வாக்குகளை விசில் சின்னத்திற்கு தந்து இந்த ஒரு முறை எனக்கு வாய்ப்பு தந்து என்னை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுங்கள் மணப்பாறை சட்டமன்ற தொகுதியை தன்னிறைவான சட்டமன்ற தொகுதியாக மாற்றிக் காட்டுவேன் என்று பேசினார்

செல்லும் இடங்களில் எல்லாம் பெண்கள் மற்றும் இளைஞர்கள் மிகுந்த உற்சாகத்துடன் ஆரவாரத்துடன் விசில் அடித்தும் பட்டாசுகள் வெடித்தும் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

# சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு......

## (முதல்பக்கத் தொடர்ச்சி)

ஏதேனும் விதிமுறைகள் மீறப்பட்டிருந்தால் அதை உடனே போட்டோவோ ஆடியோ எடுத்து போடலாம். அதில் 111 புகார்கள் இது வரைக்கும் வந்துள்ளது. 111 புகார்களும் சிவீஜீ லேப் முக்கியத்துவம் என்னவென்றால் ஒன்றரை மணிநேரத்திற்குள் அந்த புகார்களை முடிக்கணும். திருவள்ளூர் மாவட்டத்தை பொறுத்தவரைக்கும் வந்திருக்கும் அனைத்து புகார்களும் தொன்னூறு நிமிடங்களுக்குள் அந்த பணிகள் முடிக்கப்பட்டு அதற்கான தீர்வுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

திருவள்ளூர் மாவட்டத்தை பொறுத்த வரை இன்று வரைக்கும் பணமாக 15,24,64,176 பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. ஆபரணங்களாக தங்கம் பொறுத்தவரைக்கும் ரூ.64 கோடியும் வைர ஆபரணங்கள் பொறுத்த வரைக்கும் ரூ.2 இலட்சம், வெள்ளி உட்பட பல்வேறு ஆபரணங்கள், மதுபானங்கள், கஞ்சா, குட்கா இதர பொருட்கள் எல்லாம் சேர்த்து மொத்தமாக 80,34,83,973 மதிப்பிலான பொருட்கள் மற்றும் பணம் வந்து இதுவரைக்கும் பறக்கும் படையினரால் பறிமுதல் படுத்தப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் இருக்கும் 10 சட்டமன்ற தொகுதிகளில் 160 வேட்பாளர்கள் தேர்தல் போட்டியிட போகிறார்கள். அதிகபட்சமாக அம்பத்தூர் தொகுதியில் 23 நபர்களும் குறைந்தபட்சமாக பூந்தமல்லி தொகுதியில 11 நபர்களும் போட்டியிட போகிறார்கள்.அனைத்து பணிகளும் முடிந்து இரண்டு வாக்கு எண்ணும் மையங்கள் உள்ளன. ஒன்று ஸ்ரீராம் கல்லூரி மற்றொன்று செவ்வாப்பேட்டை பாலிடெக்னிக். வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்கு எண்ணும் மையங்களிலுள்ள ஸ்ட்ராங் ரூம் அந்த வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்படும். 2 பிரிவுகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது. திருவள்ளூர் காவல் கண்காணிப்பாளர் மற்றும் ஆவடி காவல் என 2 குழுக்கள் மற்றும் ஒரு பிரிவு சிஆர்பிஎஃப் மத்திய காவல்படையிலிருந்து வந்திருக்கிற அதிகாரிகளும் ரெண்டு பேருமே இருபத்து நான்கு மணிநேரமும் வாக்கு எண்ணும் மையத்தை சுற்றி தேவையான காவல் பணிகளை மேற்கொள்வார்கள் என மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் கூறினார்.

இதில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்த சுக்லா,உதவி மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட வருவாய் அலுவலருமான ச.சுரேஷ், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# உருது தொடக்கப் பள்ளியில் மாணவர் சேர்க்கை விழிப்புணர்வு பேரணி..!




வந்தவாசி, ஏப் 12:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த பக்கீர் தக்கா ஊராட்சி ஒன்றிய உருது தொடக்கப் பள்ளியில் மாணவர் சேர்க்கை விழிப்புணர்வு பேரணி நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியர் எம். ஓய்.அப்துல் ரகுமான் தலைமை தாங்கினார். முன்னாள் மாணவர் ஜா.தமீம் முன்னிலை வகித்தார். பேரணியை ஓய்வு பெற்ற காவல் அதிகாரி சை.இஸ்மாயில் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்வுக்கு பெற்றோர்கள், முன்னாள் மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நிறைவாக அங்கன்வாடி பணியாளர் அ.மொபினா நன்றி கூறினார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421